விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 348 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 16 சனிக்கிழமை (02.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## சித்தன்கேணி இளைஞன் மரணம் 5ஆம் திகதி அடையாள அணிவகுப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சித்தன்கேணியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் சித்திரவதைகளுக்கு உள்ளான நிலையில் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்தமை தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ்.நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற வழக்கு விசாரணைகளின்போது, சில சாட்சியங்கள்மன்றில்தோன்றி தமது சாட்சியங் ➤15

### க.பொ.த (சா) தரப் பரீட்சைப் பெறுபேறு

## யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி தேசிய ரீதியில் 2ஆம் இடம்

### மாணவி அக்ஷயா அனந்தசயனன் சாதனை



(யாழ்ப்பாணம்)

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகியிருந்த நிலையில், யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை தேசிய ரீதியில் சாதனை படைத் ➤15

# ரணில் – மோடி துபாயில் சந்திப்பு

- முக்கிய பல விடயங்கள் கலந்தாய்வு.
- பொருளாதார கூட்டு முயற்சி ஒப்பந்தம் சாத்தியம்.
- சந்திப்புத் தொடர்பில் பாரதப் பிரதமர் மகிழ்ச்சி.



டுபாயில் நடைபெறும் காலநிலை மாநாட்டில் பங்கேற்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு பாரதப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

முன்னதாக கடந்த 29ஆம் திகதி இலங்கை வர்த்தக சம் ➤15

## யாழ்.இந்துவில் 74 பேருக்கு 9ஏ

(யாழ்ப்பாணம்)

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.இந்துக் கல்லூரியில் 74 மாணவர்கள் 9 பாடங்களில் “ஏ” சித்திகளையும் 73 மாணவர்கள் 8 பாடங்களில் “ஏ” சித்திகளையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். (ந-7,9)

## வடக்கில் புயல் வீசலாம்

### சிவப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

பலத்த காற்று மற்றும் கடல் சீற்றம் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

அடுத்த 24 மணி நேரத்துக்கு செல்லுபடியாகும் வகையில் குறித்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார், காங்கேசன்துறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு கடற்பகுதிகளுக்கு அடுத்த 48 மணித்தியாலங் ➤15

## குப்பைக்குள் வீசப்பட்ட ஓ.எல் பரீட்சை விடைத்தாள்கள்

### ஜோசப் ஸ்டாலின் வெளிக்கொணர்வு



(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் 52 விடைத்தாள்கள் குப்பைக் குவியலொன்றில் இருந்து பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் கண்டெடுத்ததாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். ➤15

## உயர்தர மாணவர்களுக்கு ஜனாதிபதியின் புலமைப்பரிசில்

### விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்க தகுதிபெற்றுள்ள மாணவர்களுக்கு கடந்த வருடத்தைப் போன்று, இந்த வருடமும் ஜனாதிபதி நிதியத்தின் புலமைப்பரிசில் வழங்கும் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கமைய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலில் மேற்படி ➤15

## மோட்டார் சைக்கிள் விபத்து; இருவர் பலி; இருவர் படுகாயம்

### கல்லுண்டாய்வெளியில் துயரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்லுண்டாய்ப் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்தில் படுகாயமடைந்த மேலும் இருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த விபத்தில் உயிரிழந்தவர்களில் ஒருவர் மருத்துவர் என அடையாளம்காணப்பட்டுள்ளார். (ந-7,9)

## புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் 2024இல் கொண்டு வரப்படும்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு




(கொழும்பு)

எதிர்வரும் ஆண்டின் ஆரம்பத்தில் மீண்டும் மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையிலான புதிய சட்டமொன்றை கொண்டுவர எதிர்பார்த்திருப்பதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ➤16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 06 - 06 - 1952

இறப்பு 30 - 11 - 2023

## பொன்னுத்துரை யோகரட்ணம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் நந்தாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை யோகரட்ணம் அவர்கள் நேற்று முன்தினம் (30.11.2023) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - பராசக்தி தம்பதியரின் அன்பு மகனும் தனலட்சுமியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற மயில்வாகனம் - கனகாம்பிகை தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற பாலச்சந்திரன், ராணி, ரதி, ரஞ்சி ஆகியோரின் அன்பு மிக்க சகோதரனும் ராஜ்கண்ணன் (பிரான்ஸ்), ராஜ்குமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ராஜ்மதன், லக்ஸ்சுமன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜகௌரி, குமுதினி, தர்ஷிகா ஆகியோரின் பாசமிக்க மாமனாரும் கிஷாந், கயிந், அஜந் (பிரான்ஸ்), சுஜிவன், சாருஜன், சனா (பிரான்ஸ்), ஸேனுஜா, அக்ஷரா ஆகியோரின் அன்பு மிக்க பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (03.12.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(18069)

நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு.

077 344 8571 (சுமன் - மகன்)

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு 12 - 06 - 1956

உதிர்வு 30 - 11 - 2023

## திருமதி தங்கவேலாயுதம் தவமலர்

'திலீபம்', கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேலாயுதம் தவமலர் அவர்கள் 30.11.2023 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தங்கவேலாயுதம் (வேலாயுதம்) அவர்களின் பாசமிகு மனைவியும் திலீபன் (சுவிஸ்), திலீபா, தீபிகா, திவ்வியா, தனா (கிழக்கு பல்கலைக் கழகம்), நிவேதிகா ஆகியோரின் அன்புத் தாயாரும் நவநீதன் (ஆசிரியர் - கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் திக்ஷியாவின் அன்புப் பேர்த்தியாரும் கலாவதி (ஜேர்மன்) அமரர்களான திலகவதி, எகதாசன் மற்றும் ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), ஜெகநாதன் (சுவிஸ்), புஸ்பராணி, சிவராணி (லண்டன்), யோகராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.12.2023 இன்று சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர் 077 614 6973

"திலீபம்", கொற்றாவத்தை.

(C-7777)

## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

நாவலர் வீதி, அரியாலை

### மாணவர் அனுமதி

**எமது பாடசாலையில் பின்வரும் தரங்களுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன**

1. தரம் - 06 (2023 புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேற்பட்டவர்கள்)
2. தரம் 12 (க.பொ.த உயர்தரம் - 2025)

பாடசாலை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 12.12.2023 செவ்வாய்க்கிழமைக்குள் மீள அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(C-7781)

- அதிபர் -

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 04 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 Km,
- திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 Km, நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 Km, திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 Km விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்: காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

(18066)

தொடர்புகளுக்கு : ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

# ஈராண்டு நினைவலைகள்



அமரர்

## திரு. மார்க்கண்டு சண்முகலிங்கம்

திதி - அபரபக்க பஞ்சமி

தோற்றம் : 01.05.1958

மறைவு : 23.11.2021

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும் எங்கள் முன்னே
உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்து நீங்கள் விண்நோக்கிச்
சென்றாலும் கண்விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்.

அண்ணாசிலையடி, கரணவாய், கரவெட்டி.

(18067)

உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பௌத்த மயமாகும் தமிழர் பகுதிகள்

# இந்திய அரசாங்கம் தலையிட வேண்டும்

## தொல். திருமாவளவன் வேண்டுகோள்

**(கொழும்பு)**

**இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாரம்பரிய இந்து ஆலயங்களை அழித்து பௌத்த விகாரைகள், மடாலயங்களை அமைக்கும் முயற்சியை தடுப்பதற்கு பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான மத்திய அரசு தலையிட வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் எம்.பியுமான தொல். திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக அளவில் இந்துக்கள் மற்றும் கோயில்களின் பாதுகாவலராக பாரதிய ஜனதா கட்சி விளங்குகின்றது.

இலங்கையில்வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பழம் பெரும் கோயில் அழிக்கப்படுகின்றன.

இந்துக்களின் கலாசார அடையாளங்கள் பௌத்த அடையாளங்களாக மாற்றப்படுகின்றன. இந்த விடயத்தில் பா. ஜ. க. மத்திய அரசு மௌனம் காக்கிறது.

இதேநேரம், புதுடில்லிசென்றுள்ள யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன் குறைந்தது ஆயிரத்து 800 ஆலயங்களை இலங்கையின் அரச இயந்திரங்கள் அழித்துள்ளன என்று சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## 13588 பேருக்கு '9A'

(கொழும்பு)

இம்முறை சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய 13,588 பேர் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.


பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். பரீட்சைக்குத் தோற்றிய 4 இலட்சத்து 72 ஆயிரத்து 553 மாணவர்களில் 72.07 சதவீதமான மாணவர்கள் உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-5-6)

## வெட்டுப்புள்ளிகள் வெளியாகின

(கொழும்பு)

2022-2023 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான சற் ஸ்கோர் வெட்டுப் புள்ளிகள் (Z -Score ) மறு பரிசீலனைக்கு பின்னர் வெளியிடப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். பல்கலைக்கழக தெரிவுக்கான பெறுபேறுகளை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின்உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் https://admission.ugc.ac.lk/selection/ பார்வையிடலாம். (நி-5-6)

## திரிபோஷாவை தடையின்றி விநியோகிக்க நடவடிக்கை



(கொழும்பு)

திரிபோஷா பிரச்சினைக்காவது உடனடியாக தீர்வு காணுங்கள் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய சுகாதாரத்துறை அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

திரிபோஷா விநியோகத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அடுத்த மாதம்முதல்தடையில்லாமல்திரிபோஷா விநியோகிக்கப்படும் என சுகாதாரத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன பதிலளித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த அரசாங்கம் எடுத்த தவறான தீர்மானங்களினால் திரிபோஷா விநியோகம் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளது. 3 வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்கு திரிபோஷா வழங்கல் இடைநிறுத்தப்பட்டுள்ளமை கவலைக்குரியது.

ஆகவே திரிபோஷா விநியோகம் மீண்டும் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

## நீதிமன்றங்களில் உள்ள சாட்சிக்கூண்டுகள் முழுமையாக அகற்றப்படும்-நீதி அமைச்சர்

(கொழும்பு)

நீதிமன்றங்களில் உள்ள சாட்சிக்கூண்டுகள் முழுமையாக அகற்றப்படும் என நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ நேற்று முன்தினம், தெரிவித்தார்.

நீதிமன்றம் என்பது பயத்துடனும் சந்தேகத்துடனும் செல்லும் இடமல்ல. நீதிமன்றத்தின் முன் சாட்சியமளிக்கும் அனைவரும் குற்றவாளிகள் அல்ல.

சாட்சிகள் நீதித்துறை செயற்பாட்டில் உதவும்



குடிமக்கள்.

எனவே கூண்டில் இருந்து சாட்சியமளிக்கும் 'கூண்டு முறை மாற்றப்பட்டு, கண்ணியமான முறையில் சாட்சியம் அளிக்கும் முறை இந்த ஆண்டு இறுதிக்குள் தொடங்கப்படும் என நீதியமைச்சர் தெரிவித்தார்.

நீதி அமைச்சில் நீதிமன்ற முறைமைக்கு அட்டை கொடுப்பனவு முறையை அறிமுகப்படுத்துவதற்கான உடன்படிக்கையை மக்கள் வங்கியுடன் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்து கொண்டு நீதியமைச்சர் இந்த கருத்துக்களை வெளியிட்டார். (நி-5-6)

## தரமற்ற தேங்காய் எண்ணெய் மீள் ஏற்றுமதி செய்யப்படும்

### அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

தரமற்ற தேங்காய் எண்ணெயை நாட்டில் பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டாது என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக எழுப்பிய வாய்மூல கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தரமற்ற தேங்காய் எண்ணெயை இந்த நாட்டில் பயன்படுத்த அனுமதிக்கப் பட மாட்டாது எனவும் அவ்வாறான தேங்காய் எண்ணெய் மீண்டும் ஏற்றுமதி செய்யப்படும்.

உரிய ஆய்வுகளின் பின்னரே மீள் ஏற்றுமதி மேற்கொள்ளப்படும் எனவும் இறக்குமதி செய்யப்படும் சில தேங்காய் எண்ணெய்கள் உயர்தரமானவையா எனக் கூற முடியாததால், அவற்றை தரப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (நி-5-6)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

எங்கள் சிறிய தாயார்
மயிலிட்டியூர்

அமரர். திருமதி.

மகேஸ்வரியம்மா சிவசுப்பிரமணியம்
(தங்கம்பிள்ளை)
(சுதேச கால்நடை வைத்தியர்) அவர்கள்
97 ஆண்டுகள் சிறப்புற வாழ்ந்து
இவ்வுலக வாழ்வை நீத்த 31 ஆம் நாளில்
அன்னாரின் ஆத்மா சாந்தி பெற வேண்டி
மயிலிட்டி பெரும்புரப்பு
பிள்ளையாரை துதிக்கின்றோம்.



பத்தாவத்தை,
[illegible]லை.


(7944)

அன்பு பெறாமக்கள்
சந்தானம், பேபியர்,நந்தினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரோகித்தின் முடிவுக்கு காத்திருக்கும் பி.சி.சி.ஐ



ஒருநாள் உலகக்கிண்ண போட்டியில் சிறப்பாக செயற்பட்டதால், அடுத்த இருபது-20 உலகக்கிண்ண தொடர் வரை ரோகித் சர்மாவே கப்டனாக செயற்பட வேண்டும் என பி.சி.சி.ஐ விரும்புவதாக கூறப்படுகிறது.

ஆனால், 2022 ஆம் ஆண்டு இருபது-20 உலகக்கிண்ண அரையிறுதியுடன் இந்தியஅணி வெளியேறிய பின்னர், சர்வதேச இருபது-20போட்டிகளில் விளை யாடப்போவதில்லை என ரோகித்சர்மா அறிவித்திருந்தார்.

இந்திய இருபது-20 அணியின் கப்டனாக ரோகித்சர்மா விலகிய நிலையில் புதிய கப்டனா ஹர்திக் பாண்ட்யா செயற்பட்டு வந்தார்.

இவர்காயம் காரணமாக தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் இருந்து விலகியுள்ளார்.

இந் நிலையில் ரோகித் சர்மாவை மீண்டும் அணிக்கு கொண் டுவர பி.சி.சி.ஐ சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஒருவேளை ரோகித் ஒப்புக்கொள்ளவில்லை என்றால், தென்னாபிரிக்காவுக்கு எதிரானதொடரிலும் சூர்யகுமார் கப்டனாக தொடர்வார் என்றும் கூறப்படுகிறது. (நி-5-6)

## அமைதியே சிறந்த பதில்



மும்பை இந்தியன்ஸ் அணியின் பிரதான வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள வித்தியாசமான ஒரு பதிவில்,

"சில நேரங்களில் அமைதியே சிறந்த பதில்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம அவரும் வேறு அணிக்கு தாவப்போகிறாரா என்று சமூக வலைத் தளங்களில் விவாதிக்க தொடங்கியுள்ளனர்.

மேலும், இன்ஸ்டா கிராம் மற்றும் எக்ஸ் தளங்களில் மும்பை அணியின் சமூக வலைத்தளத்தை பின்தொடர்வதையும் பும்ரா நிறுத்தியுள்ளார். (நி-5-6)

## மும்பை அணிக்கு திரும்பியது மகிழ்ச்சி

### ஹர்திக் பாண்ட்யா



மும்பை இந்தியன்ஸ் அணியில் ஹர்திக் இணைந்துள்ள நிலையில் எக்ஸ் தளத்தில் வீடியோவுடன் ஒரு பதிவை பாண்ட்யா வெளியிட்டு ள்ளார். அதில் இது பல அற்புதமான நினைவுகளை திரும்பக்கொண்டு வருகிறது. மும்பை இந்தியனஸ் அணிக்கு திரும்புவது மகிழ ச்சியாக உள்ளதாக தெரிவி த்துள்ளார்.இந்தியாவில் நடத் தப்படும் ஐ.பி.எல் தொடரின் 17 ஆவது சீசன்அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நிலையில் சீசனுக்கான வீரர்கள் ஏலம் எதிர் வரும் 19 ஆம் திகதி துபாயில் நடக்க உள்ளது. இதையொட்டி விடுவிக்கப்படும் மற்றும் தக்க வைக்கப்படும் வீரர்களின் பட் டியலை அணி நிர்வாகங்கள் சமர்ப்பிக்க ஐ.பி.எல் அமைப்பு காலக்கெடு கொடுத்திருந்தது.

இந்நிலையில் ஹர்திக் பாண்ட்யாவை மும்பை இந்தியன்ஸ் அணி வாங்கியது. இதனையடுத்து குஜராத் அணியின் புதிய கப்டனாக சுப்மன்கில் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் மும்பை இந்தியன்ஸ் அணியில் இருந்து விடுவிக்கப்பட்ட கேமரூன் கிரின் ஆர்சிபி அணிக்கு இணைந்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்களை விரைந்து நடத்துங்கள் ரணிலிடம் சந்திரிகா வலியுறுத்தல்

(கொழும்பு)
மக்கள் ஆணையுள்ள பலம் மிக்க தலைவரையும் அரசாங்கத்தையும் நாட்டு மக்கள் மாத்திரமல்லர் சர்வதேசம் கூட விரும்புகின்றதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தேசிய தேர்தல்களை விரைந்து நடத்த வேண்டிய கட்டாயத்துக்குள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் நடைபெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் வெவ்வேறு இடங்களில் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.



ஆனால், அவர்கள் எந்த மாதம் தேர்தல் நடைபெறும் என்று உறுதியாகக் கூறவில்லை. உள்ளூராட்சிசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு அதற்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட பின் அந்தத் தேர்தல் இன்னமும் நடைபெறாமல் இருக்கின்றது.

அந்த நிலைதான் ஜனாதிபதித் தேர்தலுக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்கும் நடக்குமா என்ற ஐயம் எழுந்துள்ளது.

எனவே வாயால் மாத்திரம் வாக்குறுதிகளை வழங்காமல் தேசிய தேர்தல்களை ஜனாதிபதி விரைந்து நடத்த வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.(நி-5-6)


## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்
## பெறுகை அறிவித்தல்

01. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,** புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பெறுகைக்காக கோரப்படுகின்றது.
02. தேவையான தகைமைகள், பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
03. ஆர்வமுள்ள வழங்குநர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் **காலை 09.00 மணி முதல் பிற்பகல் 15.00 மணிவரை 02.12.2023 ஆம் திகதியிலிருந்து 17.12.2023 ஆம் திகதி** வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
04. ஆர்வமுள்ள வழங்குநர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் **02.12.2023** தொடக்கம் **17.12.2023** ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப **9.00** மணி முதல் பிற்பகல் **15.00** மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.2000/= (வற் தவிர்த்து) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
05. கேள்வி ஆவணங்களினை பூரணப்படுத்தி **18.12.2023** ஆம் திகதி காலை **10:00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட அல்லது பிந்திக்கிடைக்கும் பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.
06. இக்கேள்வி கோரலில் உள்ள நிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல், சேர்த்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.

| தொ. இல | பெறுகை விபரம் | எண்ணிக்கை | ஒப்பந்த இலக்கம். | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (ரூபா.) | வைப்பு செல்லு படியாகும் காலம். |
| 1 | வளிச்சீராக்கி | 14 Nos | NP/14/41(13)/3/1/15/ வ.சீ/2023 | 21 நாட்கள் | 65,000.00 | 77 நாட்கள் (04.03.2024) |

**தலைவர்,**
**உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.**

02.12.2023 (சி-7722)


# மின்கட்டணம் மீண்டும் அதிகரிக்கும் சாத்தியம்

## திறைசேரி தகவல்

(கொழும்பு)
மின்சாரக் கட்டணம் மீண்டும் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாக திறைசேரியின் பிரதி செயலாளர் ஏ.கே. செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

அரச நிதி செயற்குழுக் கூட்டத்தின் போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோல் மற்றும் டீசல் என்பனவற்றுக்கு பெறுமதிசேர் வரி விதிக்கப்பட உள்ளது.

எனினும் மசகு எண்ணெய்க்கு பெறுமதி சேர் வரி அறவீடு செய்யப்படாது.

மின்சாரக் கட்டணத்திற்கும் பெறுமதி சேர் வரி சேர்க்கப்படுவதனால் அதன் கட்டணமும் அதிகரிக்கும்.

எனினும், மண்ணெண்ணெய்க்கு பெறுமதி சேர் வரி அறவீடு செய்யப்படாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.(நி-5-6)

# பாறி விழுந்த மரம் மின்வடங்கள் சேதம்

(தருமபுரம்)
தொடரும் சீரற்ற காலநிலையால் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஏ-35 பிரதான வீதியில் அமைந்துள்ள கடை ஒன்றின் மீது பாறிய மரமொன்று முற்று முழுதாக வேருடன் சாய்ந்துள்ளதுடன் மின் வடங்களும் சேதமடைந்துள்ளது. இதன் காரணமாக குறித்த பகுதியில் மின்சாரம் முற்றுமுழுதாக துண்டிக்கப்பட்டதோடு கடையின் முற்பகுதி மின் கூரையும் சேதமடைந்துள்ளது.

நேற்று முன்தினம் பெய்த கனமழையின் போதே குறித்த மரம் சாய்ந்தது. இதனையடுத்து நேற்று கிளிநொச்சி அரச மர கூட்டுத் தாபனத்தினரால் அங்கிருந்த மரம் முற்று முழுதாக அகற்றப்பட்டது. (நி-5-6-316)

# இராசிபலன்

02.12.2023
கார்த்திகை 16, சனிக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 06.12 மணிவரை

பூசம் முன்னிரவு 08.17 மணிவரை
சுபநேரம் -03.15-4.45 மணிவரை
இராகுகாலம்-09.15-10.45 மணிவரை

சந்திராஷ்டமம்-
பூராடம், மூலம்.

வளவன்

**மேஷம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கடகம்** பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், பயணங்கள் மூலம் சுப செய்திகளைப் பெறுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும் ,கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்ப மகிழ்ச்சி கூடும் ,பிறர் உதவியுண்டு, கௌரவமான நாள்.

**மகரம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டவேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்** வீட்டு உபயோகப் பொருட்களைவாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் பெருமை காணவேண்டிய நாள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்** தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**மிதுனம்** கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், வெளியூர்ப் பயணங்களால் நன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, விட்டுக் கொடுத்துச் செல்வதால் அமைதி கிடைக்கும்.

**மீனம்** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

சிறு வயதிலேயே ஒழுக்கத்தைக் கற்றுக் கொண்ட ஒருவன் வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பிற்கு போதைப் பாவனையே முக்கிய காரணம்

(யாழ்ப்பாணம்)

**யாழில் போதைவஸ்து பாவனை அதிகரிக்கும் போது எச்.ஐ.வி தொற்றாளரின் எண்ணிக்கையும் அதிகரிக்கலாம் என வடபிராந்திய பாலியல் நோய்த்தடுப்பு சிகிச்சை நிலைய வைத்திய நிபுணர் மருத்துவர் ஏ.ரொகான் தெரிவித்துள்ளார்.**

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கையில் தற்போது வரை 5,500 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதிலே வடக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் 90 பேர் எச்.ஐ.வியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழில் கிட்டத்தட்ட 65 பேர் எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் 3 பேர் புதிதாக இனங்காணப்பட்ட நிலையில் இந்த ஆண்டு நான்கு பேர் அடையாளம் காணப்பட்டு இருக்கிறார்கள்.

அவர்களுக்குரிய சிகிச்சைகள் யாழ்.போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33-104)

## பரிசில் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம் டிசெம்பர்-3 சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தும் நோக்குடன் கட்டுரை, கவிதை, சிறுகதை, சித்திரப் போட்டிகளை நடத்தியிருந்தது.

இதில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

# யாழ். பல்கலை மாணவர்களுக்கு இந்திய அரசாங்கம் நிதியுதவி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேருக்கு, இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள நிதியுதவிச் செயற்றிட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதற்கட்ட நிதிரூபா மூன்று மில்லியனுக்கான காசோலையை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் மற்றும் மாணவர் பிரதிநிதிகளிடம் கையளித்தார்.

அத்துடன் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் கலாசார உறவுகளுக்கான பேரவையின் உயர்கல்விப் புலமைப் பரிசில் (ஐ.சி.சி.ஆர்) பெற்று இந்தியாவில் உயர்கல்வி பெறச் செல்லும் இந்து கற்கைகள் பீட விரிவுரையாளர்கள் இருவருக்கான அனுமதிக் கடிதமும் வழங்கி வைக்கப்பட்டது.


இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், கொழும்பிலுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதரக அதிகாரிகள், யாழ்.இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், பல்கலைக்கழகப் பதிவாளர், நிதியாளர், பீடாதிபதிகள் மற்றும் மாணவர் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (நி-5-6)

## புலமைப்பரிசில் பரீட்சை-2023 சித்தியடைந்தோர் விபரம்

**யா/வலி/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி**

அ.டினாஸ்கா-158, இ.அபிநயஷ்மி-157, ஜெ.மதுசாந்-155, ச.வஸ்மிதா-151, சி.நிதுயன்-147, பி.மகிசாயினி-146.

## மோட்டார் ஷெல்கள் மீட்பு



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாள் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் வெடிக்காத நிலையில் மூன்று மோட்டார் ஷெல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தோட்டக் காணி ஒன்றினை துப்பரவு செய்த போதே மேற்படி ஷெல்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பாக காணி உரிமையாளரினால் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு வெடிபொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (நி-5-6-30)

## இளம் பாடகருக்கான போட்டி மகாஜன மாணவி முதலிடம்

(யாழ்ப்பாணம்)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட இளம் பாடகருக்கான போட்டியில் மகாஜனக் கல்லூரி மாணவி மதுவந்தி மயூரன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (நி-5-6)

# தேசியமட்ட இசைநாடக போட்டி மானிப்பாய் மெமோறியல் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

தேசியமட்ட கர்நாடக சங்கீத இசைநாடகப்பாடல் போட்டியில் யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை மாணவர்கள் 1 ஆம் இடத்தினை பெற்றுள்ளனர்.

அகில இலங்கை கர்நாடக சங்கீத போட்டி அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



## பயிற்சி நெறிகளுக்கான ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தினால் காளான் சார் உணவுப்பொருட்கள் உற்பத்தி, விளக்குமாறு உற்பத்தி மற்றும் ஊறுகாய் வகை உற்பத்தி (மிளகாய்,தேசிக்காய், மாங்காய், உள்ளி) ஆகிய பயிற்சி நெறிகள் நடைபெறவுள்ளது.

எனவே மேற்படி துறைகளில் சுயதொழில் உருவாக்கத்தினை மேற்கொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்கள் கலந்து பயன்பெற விரும்பின் எதிர்வரும் 5.12.2023 இற்கு முன் 021 226 4958 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு களை மேற்கொள்ள முடியும் என கரவெட்டி பிரதேச செயலகத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)




# யாழ்.பேருந்து நிலையத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் கஞ்சா போதைப் பொருளுடன், கிளிநொச்சியை சேர்ந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பேருந்து நிலையத்தில் நின்ற இளைஞனை கைது செய்து சோதனையிட்ட போது, இளைஞனிடம் இருந்த ஒரு கிலோ 480 கிராம் கஞ்சாவை மீட்டதுடன் குறித்த இளைஞனையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனையும் மீட்கப்பட்ட கஞ்சாவையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்.பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தியுள்ளனர். (நி-5-6-33)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத சட்டம் தொடர்ந்தும் அமுலில்

## இலங்கை குறித்து அமெரிக்கா கவலை



(கொழும்பு)


பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்தும் பயன் படுத்தப்படுவதாக வெளியாகும் தகவல்கள் கவலையளிக்கின்றன என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் தெரிவித்துள்ளார். அமைதியான வழியில் ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் கைது செய்யப்படுவது, சிறைச்சாலை களில் தடுத்துவைக்கப்பட் டுள்ளவர்கள் நடத்தப்படும் விதம் உட்பட பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்து பயன் படுத்தப்படுவது குறித்து தகவல்கள் கிடைப்பது கவலையை ஏற்படுத்துகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

கருத்துசுதந்திரத்தையும் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் மனிதாபிமான ரீதியில் நடத்தப்படுவதையும் உறுதிப் படுத்துவது அவசியம்.

குறிப்பாக அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் பயங்கரவாத தடைச்சட்டத்தை அகற்றி விட்டு புதிய சட்டத்தை கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள தருணத்தில் அது அடிப்படை சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும் எனவும் ஜூலிசங் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# புலிகளுடனான போரைத் தடுக்க தவறியதற்கு யார் பொறுப்பேற்பது?

## முருத்தெட்டுவே தேரர் கேள்வி



(கொழும்பு)

இலங்கையில் விடுதலை புலிகள் இயக்கத்துடன் இடம் பெற்ற போரை தடுக்க தவறியமைக்கு யார் பொறுப்பேற்பது என கொழும்பு பல்கலைக்கழக த்தின் வேந்தரும் அபயராமை விகாரையின் விகாராதிபதியுமான முருத் தெட்டுவே ஆனந்த தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

புதிய பதில் பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்ன கோன் நியமிக்கப்பட்டமைக்கு எதிராக கத்தோலிக்க திருச்சபை வெளியிட்ட அறிக்கை தொடர் பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே, தேரர் இந்த கேள்வியை முன் வைத்துள்ளார்.

இலங்கையில் கடந்த 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுக்க தேசபந்து தென்னகோன் தவறியுள்ளார் எனும் குற்றச் சாட்டையும் கத்தோலிக்க திருச் சபை முன்வைத்துள்ளது.

இந்த நிலையில், குறித்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமா யின், விடுதலைப்புலிகளுட னான போரைத் தடுக்க தவறிய குற்றச்சாட்டுக்கு யார் பொறுப்பேற்பது என கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தரும் அபயராமை விகாரையின் விகாராதிபதியுமான முருத்தெட்டுவே ஆனந்த தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கத்தோலிக்க திருச்சபை வெளியிட்டுள்ள எதிர்ப்புக்கு பின்னால் வேறு மறைக்கப்பட்ட திட்டங்கள் இருப்பது தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தேசபந்து தென்ன கோனின் நியமனத்தை கத்தோலிக்க திருச்சபை ஏன் எதிர் க்கிறது எனவும் அவர் சிங்கள பௌத்தர் எனும் காரணத்தை அடிப்படையாக கொண்டு இந்த எதிர்ப்பு வெளியிடப்பட்டதா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் சிங்கள, முஸ்லிம், தமிழ் என அனைத்து சமூகங்களை சேர்ந்த மக் கள் இருப்பதாகவும் கத்தோலிக்க திருச்சபை தேவையற்ற மத ரீதியான பிரச்சினைகளை தூண்ட முயற்சிக்க கூடாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மகாநாயக்க தேரர் கள் உயிர்த்த ஞாயிறு தாக்கு தல் தொடர்பான விடயங்களில் கத்தோலிக்க திருச்சபைக்கு ஆதரவளிப்பதாகவும் அதனை இல்லாது செய்யும் வகையிலான நடவடிக்கைகளை எடுக்க வேண்டாமெனவும் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் கோரி க்கை விடுத்துள்ளார். (நி-5-6)

# யாழ்ப்பாணம் மநகர சபை

## இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடை, பல்பொருள் வாணிபக் கடைகள் (நாவாந்துறை), சந்தைகள், சிற்றுண்டிச்சாலை, வாகனப்பாதுகாப்பு நிலையங்கள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## மீள் கேள்வி அறிவித்தல் - 2024 (01.01.2024 - 31.12.2024)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் **01.01.2024**ஆம் திகதி முதல் **31.12.2024** ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள் கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா **1,150.00** (வற் வரியுடன்)

கேள்விப் படிவம் விநியோகித்தல் - 04.12.2023-11.12.2023 (மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 12.12.2023 மு.ப 10.00 மணி வரை

கேள்வி திறத்தல் - 12.12.2023 .மு.ப 10.00 மணிக்கு

விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **12.12.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

இறைச்சிக்கடைகள்,கருவாட்டுக்கடைகள் பல்பொருள் வாணிபம் , துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலை , சந்தைகள் மீள் கேள்விகோரல் - 2024

| இல | விபரம் | கடை இல | பிணை வைப்பு | ஆரம்ப கேள்வித்தொகை(வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 56,100.00 |
| 2 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,686,000.00 |
| 3 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 336,913.04 |
| 4 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 331,000.00 |
| 5 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 657,089.45 |
| 6 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 129,017.79 |
| 7 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,875,000.00 |
| 8 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 595,000.00 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 275,100.00 |
| 10 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 50,967.41 |
| 11 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,400.00 |
| 12 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 427,123.07 |
| 13 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல்.05 | 7,000.00 | 550,000.00 |
| 14 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 551,000.00 |
| 15 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 218,910.61 |
| 16 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 153,921.53 |
| 17 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 136,921.75 |
| 18 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 152,074.47 |
| 19 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | | 10,000.00 | 2,250,000.00 |
| 20 | புங்கன்குளம் உள்ளூர் உற்பத்தியாளர்களது அறிமுகச்சந்தை | | 2,000.00 | 6,910.06 |
| 21 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | | 5,000.00 | 317,000.00 |
| 22 | இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாகவுள்ள வாகன பாதுகாப்பு நிலையம் | | 1,000.00 | 339,999.00 |
| 23 | பெரிய கடை மரக்கறிச்சந்தை வாழைப்பழக்கடை வடகிழக்கு மூலையாகவும்,சந்தையின் வைரவர் கோவிலில் வடமேற்கு மூலையாகவும் உள்ள துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் | | 5,000.00 | 250,000.00 |
| 24 | செங்குந்தா சந்தைத் தொகுதியில் மீன்சந்தைக்கு மேல்விளம்பர ஒலிபரப்பு சேவை | | 10,000.00 | 500,000.00 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 021 221 5978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணி வரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**ஆணையாளர்,**
**யாழ். மாநகர சபை.**

(சி-7773)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# ஹமாஸுக்கு எ...

# மீண்டும் தொடங்...

(காசா)

**இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான போர் நிறுத்... அதிகாலையோடு முடிந்த நிலையில் மீண்டும் போ... யுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.**



ஆரம்பத்தில் நான்கு நாட்கள் தொடங்கிய போர் நிறுத்தம் அதன் பிறகு 2 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது. இதனை நீடிக்க கத்தார், எகிப்து மற்றும் அமெரிக்கா மத்தியஸ் தர்களே பேச்சுவார்த்தையில் ஈடு பட்டனர்.

ஆனால் எந்தவிதமான நீடிப் புக்கான அறிகுறியும் தென்படாத சூழலில் வடக்குக் காசாவில் துப்பா க்கிச் சூடும் குண்டுவீச்சும் நடந்...

## ரஷ்ய ஏவுகணைத் தாக்குதலில் 10 பேர் காயம், பலர் மாயம்



(கீவ்)

ரஷ்ய ஏவுகணைத் தாக்குதல்களில் 10 பேர் காயமடைந்துள்ளதோடு பலரைக் காணவில்லை என்று உக்ரைனிய அதி காரிகள் தெரிவித்துள்ள னர்.

கிழக்கு பிராந்தியத்தில் தாக்குதல்கள் தீவிரமடைந் துள்ளன.

குறிப்பாக காயமடைந் தவர்களில் இரண்டு குழந் தைகளைக் கொண்ட குடும்பம் மற்றும் 13 வயது டைய இருவர் அடங்கு வதாக தெரி வித்துள்ளது டன் மேலும் 5 பேர் இடி பாடுகளுக்குள் சிக்கியி ருப்பதாக உக்ரைனின் உள்துறை அமைச்சர் தெரி வித்துள்ளார்.

இத்தாக்குதலில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பு, 9 தனியார் வீடுகள், ஒரு காவல் நிலையம், கார்கள் மற்றும் கராஜ்கள் சேத மடைந்தன. (நி-5-6)

## ஐரோப்பாவிற்கு புலம்பெயர முற்பட்ட 4 அகதிகள் உயிரிழப்பு



(மாட்ரிட்)

ஸ்பெயின் நாட்டின் கடற் கரையில் மொரோக்கோ நாட்டை சேர்ந்த 4 அகதி களின் சடலம் கண்டுடெடு க்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

மொரோக்கோ நாட் டில் இருந்து படகுகள் மூலம் 32 அகதிகள் புலம்பெயர முயன்றுள்ள நிலையில் இவர்களில் 4 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

இதேபோல், பயணத்தில் தப்பிய புலம்பெயர்ந்தவர்க ளில் நான்கு பேர் மயக்க நிலையில் காணப்பட்டதாக வும் அவர்களில் ஒருவர் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

மொரோக்கோ மற்றும் அல்ஜீரியாவிலிருந்து படகு களில் வெளியேறும் அகதி கள் மேற்கு மத்தியதரைக் கடல் வழியாக, ஐரோப்பாவி ற்குள் குடியேற முக்கிய நுழைவுப் புள்ளிகளில் ஒன் றாக ஸ்பெயின் நாட்டில் நுழைகின்றனர்.

இதுதொடர்பாக, ஸ்பெயி னின் உள்துறை அமைச் சகத்தின் சமீபத்திய புள்ளி விபரங்களின்படி, ஜனவரி 1 மற்றும் நவம்பர் 15 வரை 13.000 இற்கும் அதிக மான புலம்பெயர்ந்தோர் ஸ்பெயினுக்கு சென்றுள்ள னர். (நி-5-6)

## சோமாலியாவில் ெ... ஒரு மில்லியன் மக்...

(மொகடீசு)

வெள்ளப்பெருக்கு கார ணமாக சோமாலியாவில் ஒரு மில்லியனுக்கும் அதி கமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளி யேற வேண்டிய கட்டாய த்தில் உள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்து ள்ளனர்.

கடுமையான மழை காரணமாக சோமா லியா, கென்யா மற்றும் தெற்கு எதியோப் பியா ஆகிய நாடுகளில் சுமார் 270 பேர் இறந்துள்ள தாக தெரிவிக்கப்பட்டுள் ளது.



சோமாலியாவில் மட் டும் வெள்ளத்தில் சிக்கி

## 2024 ஜனாதிபதி தேர்தலில் பைடனுக்கு வாக்களிக்க மாட்டேன்

### எலான் மஸ்க் அதிரடி

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர் தல் அடுத்த ஆண்டு இடம் பெறவுள்ளது. அந்த தேர்த லில் ஜோ பைடனுக்கு வாக்க ளிக்க போவதில்லை என டெஸ்லா நிறுவுநர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

எக்ஸ் தளத்தின் உரிமை யாளரும் உலக பணக்காரரு மான எலான் மஸ்க் அவ்வப் போது சர்ச்சைக்குரிய கருத் துகளை கூறிவருவது வழக் கம். இந்த நிலையில், நியூ யோர்க் டைம்ஸ் பத்திரி கைக்கு வழங்கிய செவ்வி யில், 2024 நடைபெறவு ள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜோ பைடனுக்கு வாக்களிப்பதை என்னால் நினைத்து கூட பார்க்க முடி யாது. ஜோ பைடனுக்கு வாக் களிக்க மாட்டேன் என்று நினைக் கிறேன் என தெரிவித்துள்ளார்.

அப்படியென்றால், அடுத்த அமெ ரிக்க ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்பு க்கு வாக்களிப்பீர்களா என்று கேட்டதற்கு, நான் ட்ரம்புக்கு வாக்களிப்பேன் என்றும் கூறவி ல்லை.

இது நிச்சயமாக இங்கே ஒரு கடினமான தேர்வாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார். மின்சார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரான போரை
# ...ங்கிய இஸ்ரேல்!

## ...நிறுத்தம் நேற்று
## ... போர் தொடங்கி

துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.


ஹமாஸ் அமைப்பினர் போர் நிறுத்த விதிகளை மீறியதால் மீண்டும் போர் தொடங்கியுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இதுவரை ஹமாஸ் 83 இஸ்ரேலியர்கள் மற்றும் இரட்டை குடியுரிமை கொண்டவர்களையும் 23 தாய்லாந்து மற்றும் பிலிப்பினோ நாட்டைச் சேர்ந்தவர்களையும்



தனது பிடியில் இருந்து விடுவித்துள்ளது. இஸ்ரேல், மோதலில் ஈடுபட்ட பாலஸ்தீன இளைஞர்கள் உட்பட 240 பேரை விடுவித்துள்ளது. நேற்று முன்தினம் கிழக்கு ஜெருசலேமில் 2 பாலஸ்தீனர்கள், 6 இஸ்ரேலியர்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தியது இஸ்ரேலுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (நி-5-6)

## காசாவிலிருந்து நாடு திரும்பிய தாய்லாந்து பணயக் கைதிகள்



(பாங்கொக்)

காசாவில் இருந்து விடுவிக்கப்பட்ட தாய்லாந்தின் முதல் பணயக் கைதிகள் குழு தமது நாட்டுக்கு திரும்பியுள்ளனர்.

தாய்லாந்து வந்திறங்கிய பணயக் கைதிகள் இஸ்ரேல்-தாய்லாந்து கொடிகள் பதித்த சட்டைகளை அணிந்து இருந்தனர். தாயகம் திரும்பிய அவர்கள் கடந்த ஒக்டோபர் 7 தாக்குதலில் பலியான சக தொழிலாளர்களின் மறைவுக்கு ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்தினர்.

அத்தாக்குதலில் 39 தாய்லாந்து நாட்டினரை கொன்றதுடன் 32 தொழிலாளர்களைக் ஹமாஸ் கடத்திச் சென்றதாக தாய்லாந்து அரசாங்கம் தெரிவித்துள்ளது.

காசாவில் விடுவிக்கப்பட்ட மொத்தம் 23 பேரில் 17 பேர் கொண்ட முதல் குழு நேற்று முன்தினம் திரும்பியது. ஒன்பது பேர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை போருக்கு முன்பு, சுமார் 30,000 தாய்லாந்து தொழிலாளர்கள் விவசாயத் துறையில் பணிபுரிந்தனர். அதுமட்டுமல்லாது இஸ்ரேலின் மிகப் பெரிய புலம்பெயர்ந்த தொழிலாளர் குழுக்களில் தாய்லாந்து விவசாயத் தொழிலாளர்கள் குழுவும் ஒன்றாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## ... வெள்ளப்பெருக்கு
## ...க்கள் இடப்பெயர்வு



100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

முழு நகரங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

ஒரு மில்லியனுக்கு அதிகமான மக்கள் வேறு இடங்களில் அடைக்கலம் தேடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அண்டை நாடுகளான எதியோப்பியா மற்றும் கென்யாவும் பரவலான வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலைமை பிராந்தியத்தில் உணவுப் பாதுகாப்பு நெருக்கடியை அதிகரிக்கிறது என்று உலக உணவுத் திட்டம் கூறுகிறது. (நி-5-6)

## கனடாவுக்கு தடை விதித்த பனாமா உயர்நீதிமன்றம்



(ஒட்டாவா)

மத்திய அமெரிக்க நாடான பனாமாவில் சுரங்கப்பணிகளை மேற்கொள்ள கனடா நாட்டு நிறுவனத்திற்கு பனாமா உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இந்த நிலையில் அதன் எதிரொலியாக உலகளவில் தாமிரத்தின் (செப்பு) விலை உயரக்கூடும் என வல்லுநர்கள் தெரிவித்தனர்.

உலகின் ஒட்டுமொத்த தாமிர உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அளவு உற்பத்தி செய்யப்பட்டு வந்த சுரங்கத்தை அடுத்த 20 ஆண்டுகளுக்கு நிர்வகிக்கும் உரிமை ஃபர்ஸ்ட் குவாண்டம் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதை கண்டித்து பனாமா முழுவதும் போராட்டங்கள் வெடித்தன.

அதோடு சுரங்கத்தில், எந்திரங்களை இயக்க தேவையான நிலக்கரியை எடுத்து வர முடியாத்படி அருகே உள்ள துறைமுகத்தை ஒரு மாதத்துக்கு மேலாக மீன்பிடி படகுகள் மூலம் மீனவர்கள் முற்றுகையிட்டுள்ளனர்.

அதேவேளை கடந்த ஒரு மாதமாக அங்கு சுரங்கப் பணிகள் நடைபெறாததால் உலகளவில் தாமிர உற்பத்தி குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

வாகனங்களுக்கான உச்சி மாநாடு அமெரிக்க வெள்ளை மாளிகையில் நடைபெற்றது. அப்போது, அதில் கலந்துகொள்ள டெஸ்லா நிறுவனத்துக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இதனால் தான் அவமதிக்கப்பட்டதாகவும் அதன் காரணமாகவே எலான் மஸ்க் இந்தக் கருத்தையும் தெரிவித்துள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், ஜோ பைடனுக்கு வாக்களித்ததாக எலான் மஸ்க் வெளிப்படையாக தெரிவித்து இருந்தார். இருப்பினும் தேர்தலுக்கு பிறகு, ஜோ பைடனுக்கும் எலான் மஸ்க்கிற்கும் இடையிலான உறவு சர்ச்சைக்குரிய வகையிலேயே அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## இஸ்ரேல் நடத்திய தாக்குதல் 37 பாலஸ்தீனியர்கள் பலி

(காசா)

போர்நிறுத்தம் நிறைவடைந்த பின்னர் நேற்று காலை கொல்லப்பட்ட பாலஸ்தீனியர்களின் எண்ணிக்கை 37 ஆக அதிகரித்துள்ளது.

காசா பகுதியின் தெற்கில் உள்ள ரஃபாவில் இரண்டு குடியிருப்பு கட்டடங்கள் மீது இஸ்ரேல் வான்வெளி தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் சுமார் ஐந்து பேர் கொல்லப்பட்டதாக காசாவில் உள்ள சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், போர் நிறுத்தம் முடிவடைந்ததையடுத்து, லெபனான் மற்றும் இஸ்ரேல் எல்லையில் அமைதி நிலவுகிறது.

இஸ்ரேலும் ஹெஸ்பொல்லாவும் ஒக்டோபர் 7 முதல், போர்நிறுத்தம் தொடங்கும் வரை தினமும் எல்லையில் தாக்குதல் நடத்தி வந்த நிலையில் தற்போது அமைதி நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இறந்தவர்களை கூட நினைவுகூர முடியாத நிலையில் தமிழ் மக்கள்

## மனித உரிமை சட்டத்தரணி பவானி

(கொழும்பு)

ஜனநாயகம் குறித்து பேசுகின்றோம். ஆனால் சில நாட்களுக்கு முன்னர் வடக்கு- கிழக்கில் உயிரிழந்த. தங்களின் உறவுகளை நினைவுகூர முயன்றார்கள் ஆனால் அவர்களால் அது முடியவில்லை என மனித.உரிமை சட்டத்தரணி பவானிபொன்சேகா தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சுதந்திரம் பெற்று 75 வருடங்கள் என நாங்கள் பேசுகின்றோம்.யுத்தம் முடிவடைந்து அடுத்தவருடத்துடன் 15 வருடங்களாகின்றன. மோதலிற்கான அடிப்படை காரணங்களிற்கு தீர்வை கண்டுள்ளோமா?

இந்த நாட்டில் அனைவரும் சமமானவர்களா? யார் இந்த மக்களிற்காக குரல்கொடுக்கின்றனர்.

உயிரிழந்த தங்கள் உறவுகளை நினைவுகூர முடியவில்லை என்றால் அதுவும் இந்த நாட்டில் ஒரு விவகாரம் தான் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# பேருந்து கட்டணத்தில் மாற்றமில்லை

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

(கொழும்பு)

டீசல் விலை குறைவடைந்த போதிலும் பேருந்து கட்டணத்தில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்படமாட்டாதென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு முதல் லங்கா டீசல் 27 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், சுப்பர் டீசல் 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## நவம்பரில் மட்டும்

# 1 லட்சம் சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் முதல் 27 நாட்களில் மட்டும் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 30 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 703 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்தியாவில் இருந்து 27 ஆயிரத்து 281 பேரும் ரஷ்யாவில் இருந்து 22 ஆயிரத்து 382 பேரும் ஜேர்மனியில் இருந்து 11 ஆயிரத்து 680 பேரும் மற்றையவர்கள் ஏனைய நாடுகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகளாக நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 380 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 1000 | 1000 | 800 | 800 |
| தக்காளி | 600 | 550 | 500 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 150 | 150 |
| கோவா | 400 | 350 | 350 | 500 |
| கரட் | 350 | 480 | 350 | 500 |
| பூசணி | 100 | 120 | 100 | 120 |
| புடோல் | 280 | 250 | 200 | 240 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 260 | 260 | 300 |
| பாகற்காய் | 800 | 600 | 500 | 700 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 120 | 200 |
| பயற்றங்காய் | 800 | 600 | 500 | 600 |
| லீக்ஸ் | 350 | 250 | 350 | 400 |
| பீற்றூட் | 280 | 300 | - | 600 |
| கறிமிளகாய் | 600 | 800 | 750 | 800 |
| முருங்கைக்காய் | 800 | — | 600 | 1000 |
| போஞ்சி | 650 | 500 | 650 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 650 | 320 |
| கீரை - 1 பிடி | 140 | 150 | 200 | 200 |
| தேசிக்காய் | 1200 | 1000 | 1000 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 450 | 500 | 450 | 500 |
| வெங்காயப்பூ | — | — | - | — |
| முள்ளங்கி | 160 | 200 | - | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 200 | 200 | - | 250 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2979

விதுஷா




லக்சுமி




மங்கை




சுதர்சன்




நிதுராஜ்




கதிரன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக அடக்குமுறைக்கு எதிராக வவுனியாவில் கண்டன ஆர்ப்பாட்டம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் ஊடக அடக்குமுறைக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றினை வவுனியா ஊடக அமையத்தினர் இன்று முற்பகல் 10 மணிக்கு வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக முன்னெடுக்கவுள்ளனர்.

ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராகவும் ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கொல்லப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதி கோரியும் குறித்த கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே, ஜனநாயக ரீதியாக முன்னெடுக்கப்படும் குறித்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், ஊடகவியலாளர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு இந்த போராட்டத்தை வலுப்படுத்துமாறு வவுனியா ஊடக அமையத்தினர் கோரியுள்ளனர். (நி-5-6-250)

# முழுநிலா பெருவிழா

(கிளிநொச்சி)

அனைத்துலக மருத்துவ நல அமைப்பு நட்டணம் பவுண்டேசன் அனுசரணையுடன் கிளிநொச்சி வடக்கு கல்வி வலய ஆரம்ப முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் முழுநிலா பெருவிழா இன்று காலை 9 மணிக்கு கிளி/முருகானந்தா கல்லூரியில் கண்டாவளைக் கோட்ட இணைப்பாளர் திருமதி. யசோதினி ஜெயந்தன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (நி-5-6)




# வவுனியாவில் 66 குடும்பங்களுக்கு வீட்டுப்பத்திரங்கள் வழங்கிவைப்பு



(குருமன்காடு)


வவுனியாவில் 66 குடும்பங்களுக்கு வீட்டு உரிமைப் பத்திரங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வானது வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கீழ் உள்ள வவுனியா மாவட்ட வீடமைப்பு அலுவலகத்தின் கீழ் வாழும் மூவினங்களையும் சேர்ந்த 66 குடும்பங்களுக்கு அவர்களது வீட்டுக்கான உரிமைப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியராச்சி, உபதலைவர் லக்ஸ்மன் குணவர்த்தன, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலாளர், வீடமைப்பு திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-5-6-250)

# தண்ணிமுறிப்பு குளத்தின் வான்கதவுகள் திறப்பு

(நெளுக்குளம்)



முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய குளங்களில் ஒன்றாக காணப்படுகின்ற தண்ணிமுறிப்பு குளத்திற்கான நீர்வரத்து அதிகரித்து காணப்படுவதால் தண்ணிமுறிப்பு குளத்தின் ரேடியல் கதவுகள் 6" இருந்து 9" அளவில் திறக்கப்பட்டுள்ளது.

எனவே தண்ணிமுறிப்பு குளத்தின் கீழப்பகுதியில் உள்ள மக்கள் குறிப்பாக விவசாயிகள் அவதானத்துடன்இருக்குமாறு முல்லை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் அறிவித்துள்ளனர். (நி-5-6-299)

# 2 எச்.ஐ.வி தொற்றாளர்கள் வவுனியாவில் அடையாளம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் இவ் வருடம் 2 எச்.ஐ.வி புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என வவுனியா பொது மருத்துவ மனையின் பாலியல் நோய் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி அருள்மொழி பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச எயிட்ஸ்தினமான நேற்று வவுனியா பொது மருத்துவமனை பாலியல் நோய் தடுப்பு பிரிவில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில்,வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரையில் 2002 ஆம் ஆண்டு முதல் 33 எச்.ஐ.வி தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள். அவர்களில் 19 ஆண்களும்13 பெண்களும் அடங்குகின்றனர். இதில் 12 பேர் இறந்துள்ளார்கள். தற்போது வவுனியாவில் 21 எச்.ஐ.வி தொற்றாளர்கள் சிகிச்சை சுகதேகிகளாக உள்ளனர். இவர்களில் 12 ஆண்களும், 09 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவ் வருடம் 2 பேர் அடையாளங்கள் காணப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். எனத் தெரிவித்தார். (நி-5-6-250)


## மாநகர எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணித்தல் 2024

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் இதுவரை பதிவு செய்யாத நிறுவனங்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டு பதிவினை மேற்கொண்ட நிறுவனங்கள் 2024 ஆம் ஆண்டுக்கான பதிவுகளை 04.12.2023 தொடக்கம் 29.12.2023 ஆம் திகதி மதியம் 3.00 மணிக்கு முன்னர் பௌதிக திட்டமிடல் பகுதியில் பதிவுகளினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன், யாழ்.மாநகர சபையில் பதிவினை மேற்கொள்ளாது குழாய்க்கிணறு நிர்மாணிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

குறிப்பு:

- குழாய்க்கிணறு நிர்மாணிப்பதற்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் - ரூபா 100.00+ VAT
- உரியவாறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, பதிவு மேற்கொள்வதற்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கான கட்டணம் - ரூபா 2000.00 + VAT

மாநகர ஆணையாளர். யாழ். மாநகரசபை. (சி-7776)



## படவரைஞர்களைப் பதிவு செய்தல்-2024

யாழ்.மாநகரசபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள், மற்றும் புதுப்பித்துக்கொள்ள விரும்புவோர் கீழ்வரும் விடயங்களினைக் கருத்திற்கொண்டு. உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 04.12.2023 தொடக்கம் 29.12.2023ஆம் திகதி மதியம் 3.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை பௌதிக திட்டமிடல் பகுதியில் மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.


- **NVQ-5 in Drafting Technology (Buildings)** கற்கைநெறியினை பூர்த்தி செய்துள்ளவர்கள் உரிய சான்றிதழினை சமர்ப்பித்து படவரைஞராக பதிவுகளினை மேற்கொள்ளலாம்.
- ஏற்கனவே 2023 ஆம் ஆண்டுக்கான படவரைஞராக பதிவு செய்தவர்கள் **NVQ-5 Drafting Technology (Buildings)** கற்கைநெறியினை தொடர்வதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தினை சமர்ப்பித்து பதிவினை புதுப்பித்துக் கொள்ள முடியும்.
- **NVQ-5 in Drafting Technology (Buildings)** கற்கைநெறியினை பூர்த்தி செய்யாத படவரைஞர்கள் 2024 ஆம் ஆண்டிற்கான புதிய படவரைஞராக பதிவினை மேற்கொள்ள முடியாது.
- மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களும், புதிதாக பதிவுகளை மேற்கொள்ளாத படவரைஞர்களும் 2024 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக யாழ்.மாநகர சபையில் தொழிற்பட முடியாது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறிப்பு:

- படவரைஞராக பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூபா 100.00+ VAT
- உரியவாறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, படவரைஞராக பதிவு மேற்கொள்வதற்கு தெரிவுசெய்யப்படுபவர்களுக்கான கட்டணம் - ரூபா 2000.00 + VAT

மாநகர ஆணையாளர்.யாழ்.மாநகர சபை.


# வெள்ளக் காடான தருமபுர பொதுச்சந்தை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பொதுச்சந்தை நீரில் மூழ்கியுள்ளதுடன் வெள்ளநீர் வழிந்தோட முடியாத நிலையில் தேங்கியுள்ளது.

இதனால் சந்தையில் வியாபார நடவடிக்கையை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் கட்டடத்தின் கூரையிலிருந்து மழைநீர் ஒழுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் மரக்கறி வியாபாரத்தினை வாழ்வாதாரமாக கொண்டு செல்லும் வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்களின் வியாபார நடவடிக்கை பாதிப்படைந்துள்ளது.

குறித்த சந்தைப் பகுதியில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்துதரும்படி வியாபாரிகள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 343



"ஓகோ! அவன் படகில் ஏறித் தப்பித்தும் போய் விட்டானா? உங்கள் ஆட்களால் அவனைப் பிடிக்க முடியவில்லையா?"

"ஆம், தாயே! அந்த மாயாவி ஒற்றன் என் ஆட்களை ஏமாற்றிவிட்டுப் போய் விட்டான். இந்த முட்டாள்கள் அவனை விட்டுவிட்டு வைத்தியர் மகனைப் பிடித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்."

"ஐயா! ஒற்றன் எப்படியாவது போகட்டும். வைத்தியர் மகனை நான் அனுப்பி வைத்தேன். அவன் குற்றமற்றவன் என்பது நிச்சயம். அவனை உடனே விடுவித்தே ஆக வேண்டும்."

"அம்மணி! இவன் ஒற்றனில்லாவிட்டாலும் ஒற்றனுக்கு உடந்தையாயிருந்திருக்கிறான். ஏதேதோ கட்டுக் கதைகளைச் சொல்லி என் ஆட்களை ஏமாற்றியிருக்கிறான். ஒற்றன் ஒளிந்திருப்பதற்கும் தப்பிப் படகிலேறிச் செல்வதற்கும் இவன் உதவி செய்திருக்கிறான்."

"அதெல்லாம் எப்படியிருந்தாலும் வைத்தியர் மகனை விடுதலை செய்தேயாக வேண்டும்."

"அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளச் சித்தமாயில்லை. நாட்டின் நாலு புறமும் அபாயங்கள் சூழ்ந்திருக்கின்றன. பகைவர்கள் படையெடுக்கக் காத்திருக்கிறார்கள்.

வீர பாண்டியனுடைய ஆபத்துதவிச் சேவகர்கள் சோழ குலத்தைக் கருவறுக்கச் சபதம் செய்திருக்கிறார்கள். நாடெங்கும் சதிகள் நடந்து வருகின்றன."

"ஐயா! சதி செய்பவர்கள் எல்லோரையும் சிறையில் போடுவதாயிருந்தால் சிறையில் இடமே இராது."

"இடம் இருக்கும் வரையில் போடலாம் அல்லவா?"

"உண்மைச் சதியாளரைப் போடுவதற்குக் கொஞ்சம் இடம் மிஞ்சட்டும். ஐயா! வைத்தியர் மகனை உடனே விடுதலை செய்யுங்கள்."

"அந்தப் பொறுப்பை நான் ஏற்க முடியாது, தாயே!"

"சக்கரவர்த்தியின் கட்டளை வந்தால் செய்வீரா! அதையும் புறக்கணிப்பீரா?"

"அம்மணி, இதற்குச் சக்கரவர்த்தியின் கட்டளை தேவையில்லை. இளையபிராட்டியின் விருப்பம் எதுவோ அதுவே சக்கரவர்த்திக்கு வேதக் கட்டளை என்பது உலகமறிந்த செய்தி. இதோ பாதாளச் சிறையின் சாவியைத் தங்கள் கையில் ஒப்புவித்து விடுகிறேன். தாங்களே சென்று கதவைத் திறந்து விடுதலை செய்யுங்கள். இன்னும் யாரையாவது விடுதலை செய்வதாயிருந்தாலும் தாராளமாய்ச் செய்யுங்கள். அதனால் வரும் லாப நஷ்டங்களுக்குப் பொறுப்புத் தங்களது."

இவ்வாறு சொல்லிக் காலாந்தககண்டர் ஒரு பெரிய சாவியை எடுத்துக் கொடுத்தார். குந்தவை பொங்கி வந்த தன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, "ஆகட்டும், ஐயா! லாப நஷ்டங்களுக்குப் பொறுப்பு நானே ஏற்றுக் கொள்கிறேன்." என்று சாவியைப் பெற்றுக் கொண்டாள்.

"இந்தச் சோழ சாம்ராஜ்யத்துக்கு ஏதாவது பெருந் தீங்கு நேர்ந்தால் அது இரண்டு பெண்களினால்தான் வந்ததாகும்" என்றார் தஞ்சைக் கோட்டைத் தலைவர்.

"நான் ஒருத்தி. அந்த இன்னொரு பெண் யாரோ?"

"பழுவூர் இளையராணி நந்தினி தேவிதான்."

குந்தவை புன்னகை புரிந்து "சோழ சாம்ராஜ்யத்தின் சர்வாதிகாரியுடன் என்னைக் கொண்டு போய்ச் சேர்க்கிறீர்களே? இது காதில் விழுந்தால் பெரிய பழுவேட்டரையர் தங்களைத் தேசப் பிரஷ்டம் செய்துவிடுவார்." என்று சொன்னாள்.

"ரொம்ப நல்லதாய்ப் போய் விடும். அதற்கு நான் காத்திருக்கிறேன்" என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

(தொடரும்...)




# சிறுவர் அரங்கம்

## தண்டனைக்குத் தகுந்த குற்றம்

(நேற்றையதொடர்ச்சி...)

உடனே, தோட்டக்காரனின் மனைவி தலைவிரி கோலமாக பீர்பால் வீட்டிற்கு ஓடிப் போய் அவரை சந்தித்துத் தன் கணவனை எப்படியாவது விடுவிக்குமாறு மன்றாடினாள். அவள் மீது இரக்கம் கொண்ட பீர்பால் "கவலைப்படாதே, உன் கணவனை விடுதலை செய்ய முயற்சிக்கிறேன்" என்று சிறைச்சாலையை நோக்கிச் சென்றார்.

சிறை அதிகாரியிடம் தோட்டக்காரன் எங்கே சிறை வைக்கப் பட்டிருக்கிறான் என்ற விபரத்தை அறிந்த பின், அவனைச் சந்திக்க அனுமதி கேட்டார். பீர்பால் சக்கரவர்த்திக்கு மிகவும்



நெருங்கியவர் என்பதால் தோட்டக்காரனை சந்திக்க உடனே அனுமதி கிடைத்தது. அவனுக்கு தைரியமூட்டிய பீர்பால் அவனிடம் ரகசியமாக ஏதோ கூறினார். அதைக் கேட்ட தோட்டக்காரன் "ஐயோ, உயிர் பிழைக்க வழி சொல்வீர்கள் என்று பார்த்தால் உயிர் போக வழி சொல்கிறீர்களே" என்று அலற, "நான் சொல்வது போல் செய், ஒன்றும் ஆகாது" என்று கூறிவிட்டு பீர்பால் சிறைச்சாலையை விட்டு அகன்றார்.

மறுநாள் காலை தர்பார் கூடியது. அக்பர் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார். அப்போது காவலர்கள் உள்ளே நுழைந்து, தோட்டக்காரன் தூக்கிலிடு முன் அவரைப் பார்க்க விரும்புவதாகக் கூறினார்கள். அக்பரும் அதற்கு சம்மதிக்க, கைவிலங்குடன் உள்ளே நுழைந்த தோட்டக்காரன் அக்பருக்கு சலாம் செய்துவிட்டு, பின்னர் திடீரென சபையில் காறி உமிழ்ந்தான்.

அதைக் கண்ட அக்பருக்கு பயங்கர கோபம் உண்டாகியது. உடனே, தோட்டக்காரன் பணிவுடன், "மன்னிக்கவும் பிரபு, என்னுடைய சாதாரணத் தவறுக்காக நீங்கள் தூக்குத் தண்டனை விதித்திருப்பது நியாயம் அல்ல என்று மக்கள் உங்களை எதிர்காலத்தில் அவதூறாகப் பேசலாம்.

அப்படி உங்களைக் குறை கூறக் கூடாது என்பதற்காகத்தான் தர்பாரில் காறி உமிழ்ந்தேன். இனி உங்களை யாரும் குறை கூற மாட்டார்கள். நான் நிம்மதியாக சாகலாம்" என்றான்.

உடனே அக்பருக்கு அவன் தன் நியாயமற்ற தண்டனையை குத்திக்காட்டுகிறான் என்று விளங்கி விட்டது. அதேசமயம், இந்த யோசனையை அவனுடையதல்ல. வேறு யாரோ அவனுக்கு சொல்லிக் கொடுத்துஇருக்கிறார்கள் என்றும் புரிந்தது.

"இந்த யோசனையை உனக்கு யாரப்பா சொல்லிக் கொடுத்தார்கள்?" என்று அக்பர் கேட்க, தோட்டக்காரன் பீர்பால் பக்கம் நோக்கினான்.

உடனே அக்பருக்கு புரிந்து விட்டது. "பீர்பால், ஏதோ கோபத்தில் தெரியாமல் அவனுக்கு தூக்குத்தண்டனை விதித்து விட்டேன். அந்தத் தவறு நிகழாமல் தடுத்ததற்கு உனக்கு நன்றி" என்றார் அக்பர். அத்துடன் தோட்டக்காரனை விடுதலை செய்வதாக அறிவித்தார்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனுடைய இலட்சியம் என்வென்று அறிந்துகொண்டால் போதும். அதனைக்கொண்டே அவனை அறிந்து கொள்ளலாம். – ஹோம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிங்கள அரசாங்கத்தை நம்பமுடியாது என்பதை...

1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரம் நடந்தபோது தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தனர்.

அப்போது இந்தியப் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி சிதம்பரம் கப்பலை இலங்கைக்கு அனுப்பி தமிழ் மக்களைக் காப்பாற்றியதை ஈழத் தமிழ் மக்கள் ஒருபோதும் மறந்துவிடமாட்டார்கள்.

தவிர, எங்கள் தமிழகச் சகோதரர்கள் எப்போதும் எமக்குப் பக்கபலமாக இருக்கின்ற உறவுகள்.

ஆக, ஈழத் தமிழ் மக்களாகிய எமக்கு அண்டை நாடான இந்தியாவே உற்ற துணை என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடலாகாது.

ஏனெனில் எங்களைப் பொறுத்தவரை எமக்கு உலக அரங்கில் முழுமையாக ஆதரவு வழங்கக்கூடிய நாடுகள் எதுவும் இல்லை எனலாம்.

அதேவேளை இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடுவதையே ஏனைய நாடுகள் விரும்புகின்றன.

அதாவது இந்தியாவை மீறி அல்லது இந்தியாவின் அனுமதியின்றி இலங்கையின் இனப் பிரச்சினை விடயத்தில் தலையிட எந்த நாடும் விரும்பாது. அதை இந்தியாவும் ஏற்றுக்கொள்ளாது.

எனவே எங்கள் விடயத்தில் விரும்பியோ விரும்பாமலோ இந்தியாவே தலையிட வேண்டும்.

இந்தியாவின் அழுத்தம் இல்லாமல் இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினையை ஒருபோதும் தீர்க்காது என்பதும் நிறு திட்டமான உண்மை.

ஆக, இந்தியாவை நாம் நம்பியே ஆக வேண்டும். இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்ததனால் ஏற்பட்ட அனர்த்தம் கொஞ்சமல்ல. அமைதிப்படை அமளிப்படையாக மாறுமென்று தமிழ் மக்கள் ஒரு போதும் எதிர்பார்த்ததும் இல்லை. என்ன செய்வது அது நடந்தாயிற்று.

இருந்தும் அது நடந்த காலம், அப்போது இந்தியாவின் ஆட்சியில் இருந்தவர்கள் என்ற மாறுபாடுகள் பற்றியும் நாம் இப்போது சிந்தித்தாக வேண்டும்.

இதுதவிர, இப்போது இலங்கை அரசாங்கம் எத்துணை தூரம் தமிழ் மக்களை ஏமாற்றுகிறது என்பதும் இலங்கை அரசாங்கத்திடம் இருந்து நாம் எந்தத் தீர்வையும் பெற்றுவிட முடியாதென்பதும் காலம் நமக்குணர்த்தி நிற்கின்ற பாடம்.

எனவே இந்தியாவுடன் நாம் சுமுகமான உறவைப் பேணுவது தமிழ் மக்களின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு மிகவும் அவசியமானது.

அதேநேரம் இந்திய மத்திய அரசாங்கத்துடன் உறவை வளப்படுத்துவதும் வலுப்படுத்துவதும் முக்கியமானது.

ஆகையால் முகவர்களினூடாக அணுகாமல், இந்திய மத்திய அரசாங்கத்துடன் நேரடியாகத் தொடர்புகளை ஏற்படுத்துவதே பொருத்தமானது.

ஆம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுடன் நேரடியான தொடர்பை ஏற்படுத்தும்போது அதனால் நமக்கு நன்மை அதிகம் என்பதை தமிழ்த் தரப்புகள் உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

# துவாரகா பெயரில் காணொளி முற்றாக நிராகரிக்கின்றோம்

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

மாவீரர் நாளில், தலைவர் வே.பிரபாகரன் அவர்களது புதல்வி துவாரகாவின் பெயரில் வெளிவந்த காணொளியினை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முற்றாக நிராகரிக்கின்றது.

கிடைக்கப்பெற்ற உறுதியான தகவல்கள், தரவுகளின் அடிப்படையிலும், எமது அவதானங்களின் வழி நின்றும் இம் முடிவினைநாம் எடுத்துள்ளோம்.

தலைவரையும், அவரது குடும்பத்தினரையும் உலகத் தமிழ் மக்கள் தங்கள் இதயங்களில் அன்போடும், மதிப்போடும் வைத்திருக்கின்றார்கள். எனவேதான் அவரது மகளாக வேறு ஒருவரை முன்வைப்பது எங்கள் உள்ளங்களில் பெரும் வேதனையை ஏற்படுத்துகின்றது.

பொதுவெளியிலும், பொதுத்தளத்திலும் தமிழ் மக்கள் இவ்விடயத்தினை நிராகரித்திருந்தமை நம்பிக்கையினை தந்துள்ளதோடு, தகுந்த பதிலடியாகவும் அமைந்துள்ளது.

இதேவேளை இவ்விவகாரத்தினை பேசுபொருளாகக் கொண்டு கையாளுகின்ற சமூக ஊடகங்களை பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

"விழிப்பே அரசியலின் முதற்படி" என்ற தலைவரது வாக்கை நாம் அனைவரும் நினைவிருத்தி, தொடர்ந்தும் விழிப்புடன் செயற்படுவோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

# யாழ் பல்கலையில் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழா நிறைவின் ஒரு கட்டமாக மேற்படி அலகினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை பல்கலைக்கழகக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகில் நடைபெறவுள்ளது.

இந்த இரத்ததான முகாமில் குருதிக் கொடையாளர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொண்டு பங்களிப்பு வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ந-7,9)

# திகட சக்கர ஏற்பாட்டில் இன்று இயற்றமிழ் வேள்வி

(யாழ்ப்பாணம்)

திகட சக்கர அமைப்பின் ஏற்பாட்டில் இன்று இயற்றமிழ் வேள்வி யாழ் இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் இடம்பெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் யாழ் மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் இடம்பெறும் இவ் இயற்றமிழ் வேள்வியில், இலங்கையில் இந்து சமயத்தை பாதுகாக்க, மத அரசியலுக்கான தேவைப்பாடு எழுந்துள்ளது/ இல்லை எனும் தலைப்பில் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் தலைமையில் சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. (ந-7)

# மாதகலில் வெடிகுண்டு மீட்பு

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, மாதகல் - உயரப்புலம் பகுதியில் உள்ள காணி ஒன்றில் நேற்று வெடிகுண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

குறித்த காணியின் உரிமையாளரினால் காணியை சுத்தம் செய்யும்போது அந்த காணியில் வெடிகுண்டு இருப்பது அவதானிக்கப்பட்ட நிலையில் அது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நீதிமன்றத்தின் அனுமதியின் பின்னர் குறித்த வெடிபொருளை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (ந-7,9,104)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** Arissona Advertising & Publication, பந்திங்சென்டர், கல்வியியல் கல்லூரி-கோப்பாய், கோண்டாவில் நீர் வழங்கல் சபை, கோப்பாய் இராணுவ முகாம், இராஜேஸ்வரி மண்டபம், பல்கலைக்கழக விடுதி, கலைவாணி, திருநெல்வேலி, கோண்டாவில் கிழக்கு, கிருஷ்ணன் கோவிலடி, பழநி ஆண்டவர் வீதி, இருபாலை வடக்கு, பொற்பதி, புகையிரத நிலைய வீதி சந்தி, இராஜவீதி சந்தி, இராஜவீதி கோப்பாய் சம்பத் வங்கி- திருநெல்வேலி, வாமாஸ் வீதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்ற வளாகம், அரசடி, சாவகச்சேரி, மருதடி, ஆசிரியர் வீதி சந்தி, சாவகச்சேரி நகரம், பிரதேச செயலகம் சாவகச்சேரி, டச்சு வீதி, கண்டுவில், கச்சாய் வீதி, கல்வயல் துர்க்கை அம்மன் கோவில் பிரதேசம், மீனாட்சி அம்மன் கோவில் சங்கத்தானை, நுணாவில், நுணாவில் வைரவர் கோவில் பிரதேசம், பெருங்குளம் சந்தி, தபால் அலுவலகம் சந்தி, புகையிரத நிலைய வீதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கிராஞ்சி, சிவபுரம், கிராஞ்சி நீர்ப்பாசன சபை, பாலாவி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேராவில் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

# தோட்ட குடியிருப்பில் தீ 45 பேர் பாதிப்பு

## அவிசாவளையில் சம்பவம்

(அவிசாவளை)

அவிசாவளை - பென்ரின் தோட்டப்பகுதியிலுள்ள லயன் குடியிருப்பு பகுதியில் நேற்று திடீரென தீப்பரவல் ஏற்பட்டது.

இத் தீ பரவலினால் குறித்த லயன் குடியிருப்பின் 8 அறைகள் தீக்கிரையாகியுள்ளதோடு 4 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இத் தீ விபத்தினால் 8 குடும்பங்களினை சேர்ந்த 45 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தீ பரவலுக்கான காரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளினை நடாத்தி வருகின்றனர். (ந-7,9)

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
JSAC
"கல்வி மனித உரிமை. அதில் ஆண் பெண் பேதம் ஆகாது. சகலருக்கும் கல்வி சமத்துவமாய் வழங்குவோம்."
16 2023
யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?



05

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஊழலுக்கு எதிரான அத்தியாவசிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துமாறு TISL நிறுவனமானது அரசாங்கம் மற்றும் பாராளுமன்றத்தை வலியுறுத்துகிறது. அவற்றில் எதுவும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பொது நிதி தொடர்பான பாராளுமன்ற மேற்பார்வையை வலுப்படுத்துதல், ஒரே மாதிரியான சட்டம் மற்றும் திறந்த கொள்முதல் தொடர்பான தளமொன்றினூடாக பொதுக் கொள்முதலின் வெளிப்படைத் தன்மை, மற்றும் பொறுப்புக் கூறலை உறுதி செய்தல், பொதுத் துறையில் அரசியல் தலையீட்டை நீக்குதல், அரசுக்குச் சொந்தமான வணிக நிறுவனங்களின் கணக்குகளை கணக்காய்வு மற்றும் மீளாய்வு செய்தல் மற்றும் சட்ட அமுலாக்க அதிகார சபைகளை வலுப்படுத்தல் என்பன அவசியமாக மற்றும் அவசரமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என TISL நிறுவனமானது மீண்டும் வலியுறுத்துகிறது.

அரசாங்கமும் பாராளுமன்றமும் இந்த விடயங்களை வார்த்தைகள் ஊடாக நிறைவேற்றுவதை விட செயலினூடாக நிறைவேற்றுவதே மக்களின் நம்பிக்கையினை மீட்டெடுப்பதற்கான ஒரே வழி என TISL நிறுவனம் குறிப்பிடுகிறது.

ஒரு முறைமை (System Change) மாற்றத்திற்கு இன்றியமையாத கலாசார மாற்றத்தினை உருவாக்க அனைத்து இலங்கையர்களுக்கும் TISL நிறுவனமானது அழைப்பு விடுகிறது. உங்களது பணியிடங்கள் மற்றும் வணிகங்களில் ஊழலுக்கு எதிரான கொள்கையினை கடைப்பிடிப்பதுடன் குடி உரிமை மற்றும் பொறுப்புக்களை நிலைநிறுத்துதல், பங்கேற்புடனான ஆட்சி, முக்கிய சட்ட சீர்திருத்தங்களை கோருதல் மற்றும் எதிர்காலத்தில் வரவிருக்கும் தேர்தல்களில் சரியாகவும் முறையாகவும் வாக்களித்தல் என்பன நாட்டின் பிரஜைகளுக்கு TISL நிறுவனத்தினால் விடுக்கப்படுகின்ற கோரிக்கைகளாகும்.

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) நிறுவனமானது ஊழலுக்கு எதிராகவும் நல்லாட்சியை மேம்படுத்துவதன் மூலம் ஊழலற்ற நாட்டை கட்டியெழுப்ப சர்வதேச ரீதியாக செயற்படும் உலகளாவிய அமைப்பான ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் (TI) உலகளாவிய அமைப்பின் உள்நாட்டு அமைப்பாகும். அதே வேளை மேற்குறிப்பிட்டவாறு இவ் CPI வருடாந்த ஆய்வுக்காக ட்ரான்ஸ் பேரன்சி இன்டர்நெஷனல் (TI) உலகளாவிய அமைப்பினால் திரட்டப்பட்ட இலங்கை தொடர்பிலான தரவுகள் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) நிறுவனத்திற்கு வெளியே பெறப்பட்டவையாகும்.

### சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம்

ஒரு நாட்டின் வளர்ச்சி திட்டங்களை ஊழல் சீரழிப்பதோடு அந்நாட்டின் நிலையான ஆட்சிக்கும் உள்நாட்டு பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக விளங்குகின்ற நிலையை நம்மால் காணமுடிகிறது. ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் 9ஆம் திகதி சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. ஊழல் ஒரு கடுமையான குற்றம். ஊழலை தடுக்கவும் இதுகுறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே அத்தினத்தின் முக்கிய நோக்கம்.

மக்கள், ஆண்டுக்கு ஒருமுறை ஊழல் எதிர்ப்பு தினம் அனுசரித்து விட்டு, மற்ற நாட்களில் 'மாமூல்' வாழ்க்கையை தொடர்வதால் ஊழல் ஒழிப்பில் எந்த முன்னேற்றமும் அடைய முடியாது. சட்ட விதிமுறைக்கு உட்பட்ட காரியத்திற்குகூட லஞ்சம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை முதலில் விடவேண்டும். லஞ்சம் கேட்பவரிடம், 'லஞ்சம் ஏன் கொடுக்கணும்' என கேட்க வேண்டும்.

ஊழலுக்கு எதிரான செயற்பாடுகளில் பங்கேற்க வேண் டும். லஞ்சப் பேர்வழிகள் மீது நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அரசுக்கு மட்டுமே உரியது என எண்ணி நமது பங்களிப்பை புறக்கணிக்கக் கூடாது. ஊழல் எதிர்ப்பு உணர்வை வளர்ப்பதில் வெளியில் இருந்து விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் தமக்குத்தாமே விதித்துக்கொண்டவையாக இருப்பின் அது நிச்சயமாக நல்ல பலனைத் தரும்.

இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகள் காரணமாக இலங்கை மாத்திரமின்றி முழு உலகமும் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. எந்தவொரு நாட்டினதும் ஊழல் செயற்பாடுகள் அந்த நாட்டின் பொருளாதாரத்தை பெருமளவில் பாதிக்கும். அதனால் தமது நாடு அபிவிருத்தி அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்ட தலைவர்களும் மக்களும் இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளை மட்டுப்படுத்திக் கொள்ளவே எதிர்பார்ப்பர்.

### ஊழலுக்கு எதிரான உலக நாடுகளின் கொள்கை வகுப்பு - 2004

அதற்காகவே 2004 ஆம் ஆண்டில் உலக நாடுகள் இணைந்து ஊழலுக்கு எதிரான கொள்கைகளை உருவாக்கின. தமது நாடு ஊழல் அற்ற நாடு என்ற பெருமிதத்தை பெற்றுக்கொள்ள விரும்பும் எந்தவொரு நாடும் அந்தக் கொள்கையை பின்பற்றலாம். நமது நாடும் அந்த கொள்கைத் திட்டத்தில் 2004 ஆம் ஆண்டிலேயே கையொப்பம் இட்டிருந்தாலும் தற்போது வரையில் உள்நுழையாமல் இருப்பது வருத்தத்திற்குரியதாகும். அதனாலேயே எமது நாட்டின் அரச மற்றும் தனியார் துறைகளில் மோசடி செயற்பாடுகள் நிறைந்து காணப்படுவதாக மக்கள் நினைக்கின்றனர்.

இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளை முற்றாக ஒழித்த நாடுகள் அதனை எவ்வாறு சாத்தியப்படுத்திக் கொண்டன என்பதை பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும். அந்த நாடுகளின் மக்கள் மத்தியில் மேற்படி செயற்பாடுகளை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கம் வேரூன்றிக் காணப்படுகின்ற போதிலும் நமது நாட்டவர் மத்தியில் அவ்வாறான எண்ணங்கள் இல்லை.

### இலஞ்ச ஊழல் அதிகம் காணப்படும் துறைகள்

இலங்கையில் இலஞ்ச ஊழலில் அதிகளவில் அடையாளம் காணப்படும் துறைகளாக பொலிஸ் திணைக்களம், கல்வி நிறுவனங்கள், இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றை குறிப்பிடலாம். விசாரணைகளை நடத்தும் பொலிஸார் நேர்மையாக நடந்தால் மட்டுமே பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயத்தை நீதியின் பால் பெற்றுக்கொள்ள முடியும். தொடர்ச்சியான மின் கட்டண அதிகரிப்பிற்கு மின்சார சபையில் காணப்படும் இலஞ்ச ஊழல் செயற்பாடுகள் காரணம் என்பது தொடர்ச்சியாக வெளிப்படுத்தப்பட்டு வந்ததை அனைவரும் அறிந்ததே.

அத்தோடு சமீபமாக உள்நாட்டு யுத்தத்தின் முடிவின் பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகளில் முதன்மைப்படுத்தி காட்டப்படுவது வீதி அபிவிருத்தியே அதில் வீதி அபிவிருத்தி அதிகார சபை பல முறைகேடுகளை செய்வதாகவும் அடிக்கடி முறைப்பாடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

### பாடசாலைகளில் இலஞ்சம்

மாணவர்களை முதலாம் தரத்திற்கு அனுமதிக்கும்போது ஒரு சில அதிபர்கள் தேசிய கல்விக்கொள்கைகளை மீறும் வகையில் ஒரு வகுப்பிற்கு அதிக மாணவர்களை அனுமதிக்கின்றனர். அச்சந்தர்ப்பத்தில் வெளி பிரதேச மாணவர்களை பிரபலமான நகர்ப்புற பாடசாலைகளுக்கு இந்த அதிபர்கள் உள்வாங்கும் போது அவர்களின் பெற்றோரிடமிருந்து இலஞ்சமாக பெருந்தொகை பணத்தை பெறுகின்றனர். மேலும் முதலாமாண்டு மட்டுமின்றி உயர்தர அனுமதியிலும் அதிகமாக பணம் பெறுகின்றனர். இதில் முக்கியமான விடயம் என்னவெனில் பணமாகப் பெற்றால் சட்டத்தின் பிடியில் சிக்கிக்கொள்வோம் என்ற பயத்தில் பொருளாகவும் இலஞ்சம் பெறும் முறை பல பாடசாலைகளில் நடைமுறையில் இருக்கின்றது.

ஒரு சில பாடசாலைகளில் அபிவிருத்திச்சங்க செயலாளர்களே இந்த பண வசூலிப்பு விடயத்தில் முன்னிற்கின்றனர்.இதன் காரணமாக பல வருடங்களாக ஒரே சங்க செயலாளர்களே தொடர்ந்தும் பதவியில் இருக்கின்றார்கள். பல அதிபர்கள் அபிவிருத்திச்சபை கூட்டத்தை ஏற்பாடு செய்யாமல் இருப்பதும் இந்த பின்னணியிலே தான்.

பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் கூட பணம் கொடுத்து சேர்ப்பதில் ஒரு சில அதிபர்களுக்கு உதவி ஆசிரியர்களாக செயற்படுகின்றனர். மேலும் தவணை முடியும் சந்தர்ப்பத்திலும் இடையில் பல வகுப்புகளுக்கு மாணவர்களை பணம் வாங்கிக் கொண்டு சேர்க்கும் விடயம் பல பாடசாலைகளில் இடம்பெறுகிறது.

பெற்றோர்களின் அக்கறையின்மை தமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தினால் தாம் இலஞ்சம் கொடுப்பதையும் அதிபர்கள் இலஞ்சம் வாங்குவதையும் வெளியில் கூறுவதற்கு பெற்றோர்கள் விரும்புவதில்லை.

இந்த காரணங்களினாலேயே பல அதிபர்கள் எவ்வித இடையூறும் இன்றி இலஞ்சம் பெற்று வருகின்றனர். இச்செயற்பாடுகளே இவர்களை ஊக்குவிப்பதாக இருக்கின்றது. இதேவேளை பாடசாலைகளில் இடம்பெறும் இவ்வாறான செயற்பாடுகள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டிய வலயக்கல்வி காரியாலயங்களிலும் அதிகார துஷ்பிரயோகங்கள், ஊழல்கள் இடம்பெறுவதால் பாடசாலைகளைப் பற்றி கண்டு கொள்ளப்படுவதில்லை என்பதே உண்மையாகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குப்பைக்குள்...

இது தொடர்பாக மேலும் கருத்துரைத்த அவர்,

விடைத்தாள்களை மதிப்பீடு செய்த பிறகு, அந்த விடைத்தாள்கள் கழிவுக் கடதாசிகளுடன் ஒன்றாக சேர்த்துக் குப்பைக் குவியலில் வீசப்பட்டிருந்தது.

எனவே மக்களின் நம்பிக்கையை சிதைக்கும் இச்சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பரீட்சை திணைக்களம் இது தொடர்பில் வெளிப்படையான விசாரணைகளை நடத்த வேண்டும்.

இதுபோன்ற சம்பவங்களை சாதாரண தவறுகள் என கருதகலாகாது. இந்த விடைத்தாள்களை இவ்வாறு வீசி எறிந்தமை கூட இம்முறை பரீட்சை முடிவுகள் வெளியாவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு காரணமாக இருக்கலாம்.

கல்வித்துறை அதிகாரிகளின் அலட்சியம் மற்றும் கவனக்குறைவால் இவ்வாறு பல்வேறு நெருக்கடிகள் உருவாகி உள்ளன. இதுகுறித்து தொழிற் சங்கங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தாலும் இதுவரை உரியவர்களிடமிருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-7,9)

## சித்தன்கேணி...

களை பதிவு செய்துள்ளன.

அதனையடுத்து வழக்கினை எதிர்வரும் 4ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதவான், மறுநாள் 5ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கும் திகதியிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் நான்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கைது செய்யப்பட்டு, கடந்த சனிக்கிழமை நீதவான் முன்னிலையில் முற்படுத்திய வேளை அவர்களை எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்க மறியலில் தடுத்து வைக்க நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

குறித்த நான்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களால் பாதிப்பு ஏற்படலாம் என்ற காரணத்தால் குறித்த நான்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை கடந்த இரு தவணைகளிலும், சட்ட வைத்திய அதிகாரி, சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள், உயிரிழந்த இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞன், உயிரிழந்த இளைஞனின் தந்தை, சகோதரன், உள்ளிட்ட 10 பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,9)

## யாழ்.வேம்படி...

துள்ளது.

பெறுபேறுகளின் அடிப்படையில் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தை கண்டி மகாமாய பெண்கள் கல்லூரி பெற்றிருந்த நிலையில், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி அக்ஷயா அனந்தசயனன் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

மேலும் தமிழ் மொழி ரீதியில் தேசிய மட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

இப்பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 270 மாணவிகளில் 115 பேர் 9 பாடங்களிலும் "ஏ" தரச் சித்திகளைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

மேலும் மாகாண மட்ட சித்திவீத ரீதியிலும் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை முதலிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது,

இதேவேளை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 74 மாணவர்கள் 9 பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றுள்ளனர். (ந-7,9)

## ரணில் - மோடி...

மேளனம் ஏற்பாடு செய்திருந்த பொருளாதார உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த அரசாங்கத்தினால் கைவிடப்பட்ட விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தை (CEPA) மீளப் பெறும் வகையில்,

நாங்கள் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளோம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் பாரதப் பிரதமருடனான குறித்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

இதேவேளை குறித்த சந்திப்புத் தொடர்பாகத் தனது எக்ஸ் வலைத் தளகத்தில் கருத்துத் தெரிவித்த பாரதப் பிரதமர் நரேந்திர மோடி "ரணில் விக்கிரமசிங்கவுடன் பல்வேறு பிரச்சினைகளை இணைந்து விவாதித்தது அற்புதமானது" எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,9)

## உயர்தர...

புலமைப்பரிசில் திட்டம் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி நாட்டிலுள்ள 100 கல்வி வலயங்களும் உள்ளடங்கும் வகையில் ஒரு கல்வி வலயத்தில் இருந்து 50 மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு, 5000 மாணவர்களுக்கு மாதாந்தம் 6000 ரூபா புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. கடந்த வருடத்தில் 3000 மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தினால் புலமைப்பரிசில் வழங்கப்பட்டது.

2022 (2023) ஆண்டில் க.பொ.த (சா.த) பரீட்சைக்கு முதன்முறையாக தோற்றி, சித்தியடைந்து உயர்தரம் பயில்வதற்கு தகுதி பெற்றிருப்பது, அரச அல்லது கட்டணம் அறவிடப்படாத தனியார் பாடசாலையில் கல்வி கற்பது, குடும்ப மாத வருமானம் 100,000 ரூபாவிற்கு குறைவாக இருப்பது இந்த புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க அடிப்படை தகுதியாக கருதப்படுகிறது.

இப் புலமைப் பரிசில் வேலைத் திட்டத்திற்கான விண்ணப்பப் படிவத்தை ஜனாதிபதி செலயகம் presidentsoffice.gov.lk, ஜனாதிபதி நிதியம் presidentsfund.gov.lk ஜனாதிபதி ஊடகப் பிரிவு pmd.gov.lk ஆகிய இணையத்தளங்களில் தரவிறக்கம் செய்யலாம்.

அந்த விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து சாதாரண தரம் கற்ற பாடசாலை அதிபர்களிடத்தில் கையளிக்கப்பட வேண்டும்.

இந்த வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க பாடசாலை மாணவர்கள் மற்றும் அதிபர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது. (ந-7,9)

## வடக்கில்...

களுக்கு செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பகுதியில் நிலவிய குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி தற்போது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகி இன்று ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுமண்டலமாக வலுப்பெற்று நாளை புயலாக வலுப்பெறவுள்ளது.

இத்தாழமுக்கம் இலங்கையின் வடக்குக் கடற்கரைக்கு அருகில் இருந்து மேற்கு வட மேற்கு திசையில் நகர்ந்து டிசம்பர் 4ஆம் திகதி வட தமிழக கடற்கரையை கடக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (ந-7,9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

லக்கி 7 VIP
திகதி 2023.12.01
சீட்டிழுப்பு இலக்கம் 141
Q 0 6 3 4 3 6 Q

தன நிதானய
திகதி -2023.12.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1345
I 01 12 56 75 I
11240

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3557
சீட்டிழுப்பு திகதி 01.12.2023
J 23 28 42 53
J 06341

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.01
சீட்டிழுப்பு இலக்கம் 0624
கடகம் 31 48 56 59 கடகம்
43439 16

மஹஜன சம்பத
திகதி 2023/12/01
சீட்டிழுப்பு இலக்கம் 5315
Y 6 1 9 7 4 3

மெகா பவர்
திகதி 01/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1663
C 15 09 15 21 63
20367

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் தன சம்பத
திகதி 01.12.2023 வெற்றி வாரம் 023
M 0 9 5 8 4 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,754,347.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2289 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.12.01 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 11 58 61 69 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,143,804/-

சனிதா
திகதி 2023.12.01 வெற்றி வாரம் 4450 வர்ணம் செம்மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 29 51 58 74 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,525,912.00

சசிரி
வெற்றி வாரம் 409
சீட்டிழுப்பு திகதி 2023.12.01 பச்சை
வெற்றி இலக்கங்கள் 06 23 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,693,160/-

சீட்டிழுப்பு வாரம் 4001 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.01 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 30 35 37 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,079,724/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 34 04 24 62 74
1465 2023.12.01 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 471,962,654.20

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2115
சீட்டிழுப்பு திகதி: 2023.12.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,021,272/-
வெற்றி இலக்கங்கள் 24 32 40 75 Q

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளியல் கருத்தரங்கு

### A/L - 2023

வளவாளர் - S.JEYAKUMAR

(B.A (Hons) Econ SPI, M.A in Econ, P.G.D.E)

- பரீட்சை எதிர்பார்ப்பு வினாவிடைகள்.
- புள்ளித்திட்ட விளக்கம்
- தேர்ச்சி அடிப்படையிலான மீட்டல்
- கையேடுகள் வழங்கப்படும்

(18062)

ஆரம்பம் : 05.12.2023 செவ்வாய் பிற்பகல் 2.00 மணி

இடம் : New Science Hall, Jaffna.

வெளிமாணவர்களும் கலந்து கொள்ளமுடியும்.

Zoom செயலி மூலமும் நடைபெறும்.

தொடர்புகளுக்கு

077 723 8597, 076 535 0999, 077 011 9434

## புதிய பயங்க...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் கீழ். சட்டமூலமொன்றை தயாரித்துள்ளோம்.

முன்னைய பயங்கரவாத சட்டமூலமானது கடுமையான சரத்துக்களைக் கொண்டிப்பதாக எதிர்ப்புக்களும் வெளியிடப்பட்டன இதனால் அனைத்து கட்சிகளுடனும், தூதுவர்களுடனும் கலந்துரை யாடி அதனை இல்லாது செய்தோம்.

அதன் பின்னர்தான். தற்போது புதிய சட்டமூலத்தை நாம் தயாரித் தோம்.

எந்தத் தரப்பையும் பாதிக்காத வகையில்தான் நாம் இந்த விடயத்தில் செயற்படுவோம். ஜனவரி. பெப்ரவரியில் இதற்கான பாராளுமன்றில் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் கிடைக்கும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## பெண் வேலையாள் தேவை

யாழ். மனோகரா திரையரங்கிற்கு அருகில் இயங்கும் புத்தக, போட்டோ கொப்பி கடைக்கு அனுபவமுள்ள / அனுபவமற்ற பெண் ஊழியர்கள் தேவை.

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

076 832 3682 (18073)

## S.D Electric Work - கிளிநொச்சி

வீட்டு வயரிங் தொழிற்சாலைக்குரிய three phase வயரிங் panal bord வேலைகள் மற்றும் வீட்டிற்குரிய பைப் லைன் bathroom pitting வேலைகள் சிறந்த முறையில் பொறியியலாளர்களால் முறைப்படி செய்து தரப்படும். கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா போன்ற இடங்களிலும் எமது சேவை கிடைக்கும்.

076 085 8111 (18042)

## அரச உத்தியோகத்தர்களுக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான இலவச ஆலோசனை

கனடா மற்றும் அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகளில் வேலை பெறுவதற்கான ஆலோசனைகள் இல்வசமாக வழங்கப்படும்.

(C-7780)

தொடர்பிற்கு - யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்

077 557 4190

## DCM - யாழ்.நகர்

(வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)

A/L 2025

கலை, வர்த்தக புதிய பிரிவு

ஆரம்பம் - 03.12.2023

காலை 8.00 மணி (C-7779)

077 778 9815 நிர்வாகம்

## வீடு விற்பனைக்கு

சோமசுந்தரம் அவெனியூவில் 1 3/4 பரப்பு வீடு விற்பனைக்குண்டு

தொடர்பு (18071)

077 732 6792

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள்

(C-7778)

V2 TRAVELS

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-

பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777

v2vacancies@gmail.com

## Canada and Italy Visa

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும்.மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

பணியாளர் தேவை

VISA CONSULTANT

134, Adiyapatham Road,Thirunelvely, Jaffna.

077 038 5584 (18039)

## TECHNO WORLD

TECHNO WORLD

INNOVATIVE IDEAS OPEN NEW WORLD

தொழில்நுட்ப கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

இம்முறை தேசிய, மாவட்ட ரீதியில் முதல்நிலை பெற்ற மாணவர்கள் தொடர்ந்து ஆறாவது முறையாகவும் முன்னிலையில்

### உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு
### BIO SYSTEMS TECHNOLOGY

| NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK |
|---|---|---|---|---|---|---|---|---|
| நிலக்ஸ்சன் | 2AB | 1 | சஜீனா | C2S | 6 | சனுக்ஸ்சி | 2BC | 18 |
| அஸ்வினி | A2B | 1 | ஜீரோசி | 2CS | 7 | சங்கீதா | 2CS | 18 |
| நிரோமி | B2C | 2 | சயந்தினி | A2B | 7 | குகப்பிரியா | B2C | 20 |
| அபிவர்சனா | B2C | 2 | தனுசா | C2S | 7 | தவருக்சன் | 3C | 22 |
| கனிஸ்கா | 3B | 2 | அர்ச்சனா | B2C | 7 | தர்சிகா | 3C | 22 |
| அன்ரனிஸ் | 3B | 2 | டிலுக்சினி | C2S | 9 | பிரவினா | 2CS | 22 |
| நந்தவி | 3C | 3 | ஜெயதர்சினி | 2CS | 11 | திலக்கிகா | 3C | 24 |
| அகஸ்ரா | 2BC | 3 | சபிர்னா | A2B | 12 | மிருதார்தன் | 3C | 24 |
| டென்சியா | 2BS | 4 | ரிகானி | C2S | 12 | தர்சிகா | C2S | 24 |
| ரேமியன் | 3C | 5 | சதுர்சிகா | B2C | 13 | திலக்சிகா | 3C | 24 |
| காவியா | A2B | 5 | யதுர்சினி | 2CS | 13 | தர்சிகா | 3C | 25 |
| செறின் | 3A | 6 | பவித்திரா | 2BC | 14 | சாமந்தி | 3C | 26 |
| தேனுஜா | B2C | 6 | சிவஸ்துதி | B2C | 16 | சுபகரினி | 2BC | 31 |
| அனுசிகா | ABC | 6 | ரகசா | 2CS | 17 | குகப்பிரியா | 2CS | 35 |

### பொறியியல் தொழில்நுட்ப பிரிவு
### ENGINEERING TECHNOLOGY

| NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK |
|---|---|---|---|---|---|---|---|---|
| திபன்பரபாகர் | 2AB | 1 | றேங்கில் | B2S | 8 | தனுசாந் | B2C | 40 |
| கிருபாகரன் | 2AB | 3 | கஜானனன் | 2CS | 8 | சப்நொன் | A2B | 42 |
| நிலோஜன் | 3B | 3 | சிந்துஜன் | 2CS | 9 | பிரதீபா | B2C | 43 |
| கனிஸ்ரன் | 2AB | 4 | லக்சன் | C2S | 9 | புஸ்பகுமார் | 3C | 47 |
| பதுசன் | 2BC | 4 | மார்க் டெக்சன் | C2S | 10 | விதுசன் | 2CS | 48 |
| லக்சனா | 2AB | 5 | ஜதுசன் | A2B | 10 | அசிவ் | 2CS | 49 |
| மரின்டா | 3C | 6 | தமிழ்முலகன் | B2C | 24 | பசித் | B2C | 58 |
| சாம்சன் | BCS | 6 | பகீரதன் | B2C | 27 | மனுஜன் | 2CS | 59 |
| மேரி ஜெர்மினா | A2B | 7 | இனியவன் | 3C | 31 | சகீப் | B2C | 59 |
| ஜானுசன் | 3C | 7 | ராகுலன் | 3C | 39 | | | |

(C-7774)

புதிய பிரிவு ஆரம்பம் - A/L 2025

ஆரம்பம் - 03.12.2023 நேரம் - காலை 8.30

P.N - 077 017 5346

## விரைவு பொதிகள் சேவை

DHL

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.

Lanka Cargo Worldwide Express

பணியாளர் தேவை

இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

070 375 0002 (18039)

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7778)

0777-068-777

49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்

V2 TRAVELS

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 299/= (Max 2Kg) |
| 1 Kg றவை | - 289/= |
| 1 Kg Prima கோதுமை | - 189/= |
| 1 Kg கோதுமை மா | - 181/= |
| 1 Kg. சிவப்பு பருப்பு | - 298/= |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 426/= |
| 1 Kg தீட்டல் பச்சை | - 170/= |
| 1 Kg அரிசி மா | - 193/= |
| 10Kg விஜிதா நாடு | - 1920/= |
| 400g அங்கர் பால்மா | - 1020/= (1080/=) |
| 750ml New V.S.P நல்லெண்ணை | - 1300/= (1400/=) |
| 70g Baby Soab | - 108/= (145/=) |
| 400g sustagen சஸ்ரயன் | - 3400/= (3900/=) |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 262/= (330/=) |
| 180ml Chik Shampoo | - 370/= (480/=) |

1020/=

Anchor

1080/-

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

(18072)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org